Page No.

Crl.Misc.39

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II COURT, KARUR

STC No.1638/2025

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW-1<br>Defence<br>Court |

| | | |
|---|---|---|
| Name | : | அசோக்குமார் |
| Father's Name | : | தனசேகரன் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of (44 of 1969) of the day of 23.09.2025

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது கரூர் மாவட்டம் மதுவிலக்க அமலாக்குபிரிவில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். சம்பவத்தின் போது மு.நி.காஆக பணிபுரிந்து வந்தேன். கடந்த 30.07.2024 ம் தேதி காலை 10.00 மணிக்கு நானும், சிறப்பு உதவி ஆய்வாளர் ராஜகோகிலாதேவி, உதவி ஆய்வாளர் சண்முகம்

ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

ஆகியோர்களுடன் மதுவிலக்கு சம்மந்தமாக வேலாயுதம்பாளையம், புன்னசத்திரம், காந்திநகர் ஆகிய இடங்கில் ரோந்து செய்தவிட்டு உதவி ஆய்வாளர் ராஜகோகிலாதேவி அவர்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி பெரியரங்கபாளையம் சென்று கண்காணித்தபோது ஆஜர் எதிரி சாவித்ரி அவரது வீட்டிற்கு முன்னால் Block Pearl 180 ml அளவுள்ள 09 மதுபாட்டில்களை வைத்திருந்தவரை கைதுக்கான அவர் செய்த குற்றத்தை கூறி காலை 10.30 மணிக்கு கைது செய்தும் பின்னர் 10.35 மணிக்கு கைபற்றுதல் மகஜரில் உதவி ஆய்வாளர் கைப்பற்றினார்.

2) என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். கைப்பற்றுதல் மகஜரில் என்னுடன் சிறப்பு உதவி ஆய்வாளர் ராஜகோகிலாதேவி என்பவர் சாட்சியாக கையொப்பம் செய்தார். கைப்பற்றுதல் **மகஜர் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து 13.00 மணிக்கு குற்ற எண். 1101/2024 ச/பி.4(1)(C) TNP Act படி உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார். நான் உடன் இருந்தேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள மதுபாட்டிகளை தான் உதவி ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் கைப்பற்றியதாகும். **அந்த புகைப்படம் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இவ்வழக்கு சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) பொதுவாக ரோந்து பணிக்கு செல்லும்போது பொதுநாட்குறிப்பில் பதிவு செய்வது வழக்கம் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பவ சமயத்தில் அவ்வாறு பொது நாட்குறிப்பில் பதிவு செய்தேன். காந்தி நகருக்கு ரோந்து பணி செல்லும் போது உதவி ஆய்வாளரிடம் சொல்லிவிட்டு தான் சென்றேன். மேற்படி ரகசிய தகவல் உதவி ஆய்வாளர் சண்முகம் அவருக்கு மட்டும் தான் தெரியும், வேறுயாருக்கும் தெரியாது என்றால் சரிதான்.

ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

இந்த வழக்கில் பார்வை மஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் எதிரிக்கு வயது 50 என்றால் சரிதான். மூத்த குடிமகன் என்றால் சரிதான். சம்பவ நடைபெற்ற இடத்திற்கு அருகில் அதிக குடியிருப்பு பகுதி உள்ளதா என்றால் சரிதான். மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றாலும் சரிதான். இவ்வழக்கில் காவல்துறையினர் தவிர வேறு சாட்சிகள் யாரையும் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான்.

2) எவ்வித அரசு அனுமதியோ உரிமமோ இல்லை என்று எதன் அடிப்படையில் சாட்சியளித்துள்ளேன் என்றால் விற்கிறார்கள் என்ற தகவலின் அடிப்படையில் கூறியுள்ளேன். இவ்வழக்கில் கைப்பற்றியதாக Block Pearl வகை அரசு மதுபாட்டிகள் அனைத்து டாஸ்மார்க் கடைகளிலும் கிடைக்கும் என்றால் சரிதான். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் காவல் நிலைய புள்ளி விவர கணக்கிற்காகவும், உயர் அதிகாரிகளின் வேண்டுகோளுக்கு இணங்கவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

3) இவ்வழக்கில் இருந்து எதிரி விடுதலை செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கு ஆவணங்கள் அனைத்து காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து விட்டு உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் மதுபாட்டிகளை எதிரியின் வீட்டிற்கு எந்த பக்கத்தில் இருந்து உதவி ஆய்வாளர் கைப்பற்றினார் என்றால் வீட்டிற்கு வலது புறத்தில் இருந்து கைப்பற்றினார். மேற்படி விவரத்தை உதவி ஆய்வாளர் விசாரித்தபோது சொல்லியுள்ளேன். நான் சாட்சியம் அளித்துள்ளவாறு வழக்கு சொத்துக்கள் எதிரிகளிடம் இருந்து கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

Crl.Misc.39

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II COURT, KARUR

STC No.1638/2025

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW-2<br>Defence<br>Court |

| | | |
|---|---|---|
| Name | : | ராஜகோகிலாதேவி |
| Husband Name | : | முருகானந்தம் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of (44 of 1969) of the day of 23.09.2025

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது கரூர் மாவட்டம் மதுவிலக்கு அமலாக்க பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.07.2024 ம் தேதி காலை 10.00 மணிக்கு நானும், மு.நி.கா அசோக்குமார், ஆய்வாளர் ரஷ்யாசுரேஷ் அவர்களுக்கு உதவியாக மதுவிலக்கு சம்மந்தமாக வேலாயுதம்பாளையம்,

ஓம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

புன்னசத்திரம், காந்திநகர் ஆகிய இடங்கில் ரோந்து செய்தவிட்டு ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி பெரியரங்கபாளையம் சென்று கண்காணித்தபோது ஆஜர் எதிரி சாவித்ரி அவரது வீட்டிற்கு முன்னால் Block Pearl 180 ml அளவுள்ள 09 மதுபாட்டில்களை வைத்திருந்தவரை கைதுக்கான அவர் செய்த குற்றத்தை கூறி காலை 10.30 மணிக்கு கைது செய்தும் பின்னர் 10.35 மணிக்கு கைபற்றுதல் மகஜரில் ஆய்வாளர் கைப்பற்றினார். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான்.

**2)** கைப்பற்றுதல் மகஜரில் என்னுடன் மு.நி.கா அசோக்குமார் என்பவர் சாட்சியாக கையொப்பம் செய்தார். எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து 13.00 மணிக்கு குற்ற எண். 1101/2024 ச/பி.4(1)(C) TNP Act படி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார். நான் உடன் இருந்தேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள மதுபாட்டிகளை தான் ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் கைப்பற்றியதாகும். இவ்வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) பொதுவாக ரோந்து பணிக்கு செல்லும்போது பொதுநாட்குறிப்பில் பதிவு செய்வது வழக்கம் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பவ சமயத்தில் அவ்வாறு பொது நாட்குறிப்பில் பதிவு செய்தேன். காந்தி நகருக்கு ரோந்து பணி செல்லும் போது ஆய்வாளரிடம் சொல்லிவிட்டு தான் சென்றேன். மேற்படி ரகசிய தகவல் ஆய்வாளர் மட்டும் தான் தெரியும், வேறுயாருக்கும் தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கில் பார்வை மஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் எதிரிக்கு வயது 50 என்றால் சரிதான். மூத்த குடிமகன் என்றால் சரிதான். சம்பவ நடைபெற்ற இடத்திற்கு அருகில் அதிக குடியிருப்பு பகுதி உள்ளதா என்றால் சரிதான்.

ஒம்/—எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

2) மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றாலும் சரிதான். இவ்வழக்கில் காவல்துறையினர் தவிர வேறு சாட்சிகள் யாரையும் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். எவ்வித அரசு அனுமதியோ உரிமமோ இல்லை என்று எதன் அடிப்படையில் சாட்சியளித்துள்ளேன் என்றால் விற்கிறார்கள் என்ற தகவலின் அடிப்படையில் கூறியுள்ளேன். இவ்வழக்கில் கைப்பற்றியதாக Block Pearl வகை அரசு மதுபாட்டிகள் அனைத்து டாஸ்மார்க் கடைகளிலும் கிடைக்கும் என்றால் சரிதான். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் காவல் நிலைய புள்ளி விவர கணக்கிற்காகவும், உயர் அதிகாரிகளின் வேண்டுகோளுக்கு இணங்கவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3) இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் இருந்து எதிரி விடுதலை செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கு ஆவணங்கள் அனைத்து காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து விட்டு உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் மதுபாட்டிகளை எதிரியின் வீட்டிற்கு எந்த பக்கத்தில் இருந்து ஆய்வாளர் கைப்பற்றினார் என்றால் வீட்டிற்கு வலது புறத்தில் இருந்து கைப்பற்றினார். மேற்படி விவரத்தை ஆய்வாளர் விசாரித்தபோது சொல்லியுள்ளேன். நான் சாட்சியம் அளித்துள்ளவாறு வழக்கு சொத்துக்கள் எதிரிகளிடம் இருந்து கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.